**சிறப்பு சார்பு நீதிமன்ற, (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்,**
**MCOP.180 /2019**

2023–ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14–ம் நாள் வியாழக்கிழமை 14.12.2023 (ம.சா.1) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு. M. பிரபு, இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விஜயரங்கன் | வயது | : |
| த.பெ. | : | தொழில் | : |
| ஊர் | : | சமயம் | : |
| வட்டம் | : | ஜாதி | : |
| மாவட்டம் | : | | |

<u>நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள அனைத்து விவரங்களும் எனக்கு தெரியும்.</u>

கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகின்றன
ம.சா.ஆ.1. முதல் தகவல் அறிக்கை நகல்
ம.சா.ஆ.2. விபத்து பதிவேடு நகல்
ம.சா.ஆ.3. Discharge summary நகல்
ம.சா.ஆ.4. Hero Splendor Pro TN 23 BL 0920 வாககனத்தின் ஆர்.சி.நகல்
ம.சா.ஆ.5. Hero Splendor Pro TN 23 BL 0920 வாகனத்தின் Insurance policy .நகல்
ம.சா.ஆ.6. Medical Bills Rs. 1,44,543/– .நகல்
ம.சா.ஆ.7. Petitioner's Driving License .நகல்
ம.சா.ஆ.8. Aadhar card .நகல்
ம.சா.ஆ.7. Bank Pass Book .நகல்

<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

வழக்கு விபத்து 29.11.2014 அன்று நடந்தது. விபத்து ஏற்பட்ட அன்றே திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் காவல் துறையினர் விசாரித்து புகார் எழுதி கொண்டார்கள். வழக்கு விபத்து நடந்து 5 வருடங்கள் கழித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. 5 வருடம் கழித்து வழக்கு தாக்கல் செய்ய காரணம் எதிரே வந்த வாகனத்தின் பதிவு எண் போலி என்று தெரிந்ததால் அதனை கண்டுபிடிக்க காலதாமதம் ஏற்பட்டது. ஆனால் எதிரே வந்த வாகனத்தின் அசல் பதிவெடு கண்டுபிடிக்க இயலவில்லை. ம.சா.ஆ.2. விபத்து பதிவேடு நகலில் வரது காலில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டதாக உள்ளது என்றால் சரி. வலது காலில் பெரிய எலும்பு இரண்டாக உடைந்துவிட்டது. அரசு மருத்துவமனையில் மேலோட்டமாக கட்டு போட்டார்கள். எலும்பு ராக இருப்பதற்காக கட்டு போட்டு நேராக மியாட் மருத்துவமனை சென்னைக்கு சென்றேன்.மேற்படி மருத்துவமனையில் 8 நாட்கள் தங்கி சிகிச்சை பெற்றேன். 8 நாட்கள் கழித்து வழக்கு தாக்கல் செய்திருக்கலாம் என்றால் , 3 மாதம்

படுக்கையில் இருந்தேன் அதன் பிறகு காவல் துறையினர் கண்டுபிடிப்பதாக கூறி காலம் கடத்திவிட்டார்கள். விபத்தானது எதிரே வந்த Yamaga crux வண்டி ஓட்டுநரின் அஜாக்கரதையால் விபத்து ஏற்பட்டது என்றால் சரி. என்னுடைய அஜாக்கிரதை எந்த வகையிலும் இந்த விபத்துக்கு காரணம் இல்லை. என்னுடைய வாகனம் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ. 5 எனது வண்டிக்கான காப்பீடு எனக்கும் 2ம் எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்பட்ட காப்பீட்டு ஒப்பந்தமாகும். நான் 2ம்எதிர்மனுதாரரை பொறுத்து 3ம் நபர் அல்ல. 2ம் எதிர்மனுதாரரிடம் வண்டிக்கு ஏற்பட்ட இழப்பீடு கோரி மனு அளத்ததில் வண்டியின் ஏற்பட்ட சேதமடைந்த பெட்ரோல் டேங்கை மாற்றி கொடுத்து விட்டார்கள். 3ம் நபருக்கான இழப்பீடு மட்டுமே இந்நீதிமன்றத்தில் கோர முடியும் என்பதால் இந்த வழக்கு இந்த நீதமன்றத்தில் நடத்துவதற்கான அதிகாரம் இல்லை என்பதால் நான் இந்த நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய இயலாது என்பதால் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனக்கு சேரவேண்டிய சட்டபடியான இழப்பீட்டை 2ம் எதிர்மனுதாரர் சரி செய்து விட்டதால் இழப்பீட்டை நான் 2ம் எதிர்மனுதாரரிடம் கோர முடியாது என்றால் சரியலல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சரியாகி விட்டதாலும் எனக்கு காயத்தால் ஊனம் எதுவும் ஏற்படவில்லை என்பதாலும் முழுவதுமாக குணமாகிவிட்டேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவ செலவாக ரூ, 5,00,000 என கூறியுள்ளேன் ஆனால மருத்துவ ரசீதுகள் ரூ. 1,44,543 க்கானதான் செலுத்தியுள்ளேன் என்றால் சரி.நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள தொகை அதிகம் என்றாலும் அதனை 2ம் எதிர்மனதாரருக்கு செலுத்து வேண்டிய கடமை இல்லை என்றாலும் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரருக்கு ஆதராவாக மனு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.